**ORIGINAL ARTICLE**

# திருமுருகாற்றுப்படை கூறும் முருக வழிபாடு [TIRUMURUKĀṞṞUPPAṬAI KŪṞUM MURUKA VAḺIPĀṬU]

# WORSHIP OF LORD MURUGAN IN THIRUMURUGATRUPADAI

**கே.ஆர்.கமலா முருகன் / K.R.Kamala Murugan** *

Queen Mary's College (Autonomous), Chennai, India. Email: kamalamuruganhari@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/192

**Abstract**

The Universal admiration of Lord Murugan is as an extremely popular, Wondering, Cheerful and Youthful God. The Name Murugan means to Sovereignty, Godhood, Leadership, Beauty, Literature in Tamil Language. Tamil legacy is proud to precise Lord Murugan as Six face God who belongs to lot of Diversities. Thirumurugatrupadai is an ancient devotional Tamil Poem in Sangam Literature which is entirely dedicated to God Shiva's son Lord Murugan. This paper is about to explains about the different manifestations and shrines of Lord Murugan, and his beauty and has a Warrior and how he is related with nature. This study follows the explanatory method and the study is about library research.

**Keywords:** Sovereignty, Legacy, Diversities, Manifestations, Warrior Nature.

**ஆய்வுச் சாரம்**

உலகம் உவக்கவும் வியக்கவும் தோன்றிய கடவுள் முருகன். முருகன் என்பது இறைமை மட்டுமன்று தமிழில்; அவனே இறைவன்; அவனே தலைவன்; அவனே இலக்கியம்; அவனே தமிழ் மொழி; இத்தகைய பன்முகங்களை உடைய அருளாளனையே ஆறுமுகங்களை உடையவனாகப் போற்றுவது தமிழ் மரபு. திருமுருகாற்றப்படை சங்க கால முருக வழிபாட்டினையும் அதன் சிறப்பினையும், முருக கடவுளின் பேராற்றல் கருணையினையும், அறுபடை வீடுகளின் அழகோடு எடுத்துரைத்து நம் சிந்தை மகிழ சிவ மைந்தனின் பெருமையினைக் கூறி பன்முகம் காட்டும் ஆறுமுகன் அருளைபெரும் நெஞ்சு உய்வடையும் வழிபாட்டு முறைகளை ஆற்றுப்படையில்

தலை நூலாகிய திருமுருகாற்றுப்படையில் எடுத்துரைப்பதனைச் சுட்டுவதாக இவ்ஆய்வு அமைகின்றது.

**கருச்சொற்கள்:** இறையாண்மை, மரபு, வேறுபாடுகள், வெளிப்பாடுகள், போர்வீரர் இயல்பு.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 7th January 2022, revised 13th February 2022, accepted 28th February 2022

**முன்னுரை**

வழிபாடு என்பது இறைவனை அடைந்திட விரும்புபவர்களின், இறையருளை விரும்புபவர்களும் விரும்பும் வகையில் அடைந்திடவும் ஒரு சில வழிபாட்டு முறைகள் தேவையாகின்றன. இவை கடந்தவர்கள் அமையினையும் சமுதாய நலனையும் விரும்பினாலும் சில வழிபாட்டு முறைகள் அவசியமாகின்றன. எனவேதான் பண்டைத்தமிழன் பல்வகையான இயற்கையினையே தம்முடைய வழிபாடாக அமைத்துக் கொண்டனர்.

கடந்து நிற்பவன் எப்தனை உணர்ந்தவர் கடவுள் என்றார். வழிபாடு என்பதனை இறைநெறி என்பதான பெயரில் அறவாழ்வினை மேற்கொள்ளுதல் என்பதாகவே வழிபாட்டின் முழுமை அமைகின்றது.

இதனை உணர்ந்து நின்ற சித்தர்களே

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பு சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பு சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே (Tirumantiram,1991)[1].

என்று போற்றியதுடன் எளிய வழிபாட்டு முறையாக

யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒருபச்சிலை
யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒருவாயுறை
யாவர்க்கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே

என்று எடுத்துரைக்கின்றார் திருமூலர் (Tirumantiram,1991)[1].

நம் முன்னோர்கள் வாழத் தெரிந்தவர்கள். தெய்வம் என்பதான மேலான சக்தியின் துணையின்றி நாம் வாழ இயலாது என்பதான அறிவியல் உண்மையை அறிவு இயலாக உணர்ந்து பயன் கொண்டதன் வடிவில் ஒன்றே வழிபாடாக அமைந்துள்ளது. வழிபாடு மனம் ஒன்றியதாக அமையும் போதுதான் பயன் மிகுதியாகப் பெற இயலும். குறிப்பாக முருக வழிபாடு

அனைத்து வழிபாடுகளிலும் சிறந்ததாக உணரப்படுகின்றனதன் காரணம் என்னவெனில், முருகனே சிவனின் முழு ஆற்றலையும் உடையவனாகவும் சக்தியின் ஆற்றலை அடைந்தவனாகவும் உருப்பெற்று 'ஸ்கந்தனாக' உருவானவன். ஸ்கந்தன் என்பதற்கு இணைந்தவன், இணைக்கப் பட்டவன் என்று பொருள். இங்கு பல நிலைகளில் பொருந்தும். நாம் ஸ்கந்தன் என்பதனைத் தமிழில கந்தன் என்று அழைகின்றோம். முருகனின் பாதங்கள் நம் தலையெழுத்தினையே அழித்து எழுதும ஆற்றல் உடையவை. மேலும் இன்றைய திரையிசையால் சொல்லச் சொல்ல இனிக்குதடா முருகா உள்ளமெல்லாம் உன் பெயரைச் சொல்லச் சொல்ல இனிக்குதடா என்றும், முருகனைக் கூப்பிட்டு முறையிட்டபேருக்கு முற்றிய வினை தீருமே,உள்ளம் பற்றிய பிணி ஆறுமே என்றும் வியந்து பாடுகின்றது. சும்மா இரு சொல் அற என்றனும் அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலேனே" என்று போற்றுகின்றார் (Jagannathan, 2017)[2]. அத்தகைய பெருமைகளையுடைய முருகனை வணங்கி சிறப்படைய முயல்வோம் என்பதனை இக்கட்டுரையும் உணர்த்துகின்றது.

## திருமுருகாற்றுப்படை முன்னிருத்தும் முருக வழிபாடு

திருமுருகாற்றுப்படை சங்க இலக்கியங்களில் பாட்டு நூல்களில் ஒன்றாகும். சைவத்திருமுறையில் ஒன்றாகவும் போற்றப்படுகின்றது. 317 அடிகளுடன் ஆசிரியப்பாவால் அமைந்த நூல் புலவராற்றுப்படை என்றும் சுட்டப்படுகின்றது. நக்கீரபெருமானால் இயற்றப்பட்டது.

## திருமுருகாற்றுப்படையின் தோற்றம்

திருமுருகாற்றுப்படையானது சங்கத்தில் தோன்றிய சங்கத்தமிழ் பாமாலையாகும். நக்கீரனார் முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அவனது அருளினையும், முருகன் அறுபடை வீட்டினில் எழுத்தருளும் அழகினையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

ஆற்றுப்படுத்தல் என்றும் பொருள்படும் வகையில் அமைந்த ஆற்றுப்படை. இந்நூல், இறைவனாகிய முருகனின் அருள் பெற்று உய்ந்து வீடு பேற்றினை அடைந்த ஒருவன், வீடுபேற்றினை அடைய விரும்பும் பிற அடியவர்களுக்கு வழிகாட்டுவதாக அமைகின்றது.

நச்சினார்க்கினியர், 'வீடு பேற்றினைப் பெறுவதற்குப் பக்குவமடைந்த ஒருவனை, வீடு பெற்ற ஒருவன் வழிப்படுத்துவது' என்று பொருள் கூறுகின்றார் (Vasantakumaran, 2020)[3]. எனவேதான் பிற ஆற்றுப்படை நூல்கள் இரவலர் பெயரில் அமைய, திருமுருகாற்றுப்படை என்னும் நூல் மட்டும் ஆற்றுப்படுத்தும் தலைவனின் பெயரால் அமைந்துள்ளது இதன் கூடுதல் சிறப்பும், முருகனின் பெருமையினையும் உணர்த்துகின்றது (Jagannathan, 2017)[2].

அறுபடை வீடுகளிலிருந்தும் தம்மை நோக்கி வரும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் நோக்கமாக இதனை அமைந்துள்ளார். முறையே அறுபடை வீடுகளாக திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, குன்றுதோறாடல் என்பனவாக அமைந்தாலும் சுருளிமலை, இலஞ்சி, குன்றக்குடி, திருத்தணி, சென்னிமலை என்ற தலங்களையும் ஐந்தாம்படை வீட்டில் போற்றுகின்றார். எங்கும் நிறைந்த முருகனின் அருள் என்பதனைத் திருமுருகாற்றுப்படை

காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்புல்
மன்றமும் பொதிலும் கந்தடை நிலையினும் (Jagannathan, 2017)[2]

**முருக வழிபாட்டு முறைகள்**

மலர்தூவி, மந்திரம் ஓதி தீப, தூபங்களால் வழிபடுவது என்பது இன்று வரையிலும் பொது வழிபாட்டு முறையாக இல்லங்களிலும் திருக்கோயில்களில் உள்ளன. இதனைக் கடந்த பல படி முறைகளில் வழிபடுவதனையும் பல்வகையான படையல்கள் இடுவதனையும் ஒவ்வொரு தெய்வத்திற்கும் வெவ்வேறு முறைகளாக மக்கள் வழக்கில் கொண்டுள்ளனர் (Agilan, 2021)[3]. அவற்றுள் முருக வழிபாட்டின் சில முறைப்பாடுகளை திருமுருகாற்றுப்படை சுட்டுகின்றது(Hemamalini, 2020)[4]. ‘மலர்களைத் தூவி சிவந்த நிறமுடைய நூலினைக் கையில் காப்பாகக் கட்டிக் கொண்டு வெண்மை நிறமுடைய பொறிகளைத் தூவி, வலிமையானதும் நன்கு கொழுத்த தன்மையுடையதுமான கிடாயின் இரத்தம் சேர்த்துப் பிசையப்பட்ட அரிசியினைப் படையலாக இட்டு வணங்கிய காட்சியினை,

மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி
சில்பலிச் செய்து பல பரப்பு இரீ இச்

என்று எடுத்துரைக்கின்றது (Jagannathan, 2017)[2].

ஆண்களின் வழிபாட்டு முறைக்கும் பெண்களின் வழிபாட்டு முறைக்கும் சில வேறுபாடுகள் தவிர்க்க முடியாமல் அமைவதனையும் நாம் எல்லா தெய்வ வழிபாடுகளிலும் காண இயலும் (Adikallasiriyar, 1978)[5]. பெண்மையின் தன்மைக்கேற்ப, தூய்மை, பொறுமை, இவைகளுடன் கடினமான விரத முறைகள் பெண்களின் வழிபாட்டில் தவிர்க்க இயலாததாகி விடுகின்றன. அவ்வகையில் திருமுருகாற்றுப்படையில் நிகழும் மகளிர் வழிபாட்டு முறைகளைப் பற்றிய குறிப்புகளில் ‘தம்முடைய வழிபாட்டிற்குரிய இடங்களைத் தூய்மையாகும்படி செய்து, முருகப் பெருமானைக் குறித்திடும் பல வகையான கொடிகளை நாட்டி, அந்தக் கொடிகளின் மீது நெய்யோடு கூடிய வெண் சிறு கடுகை அப்பினாள். தாள் அறிந்து வழிபடும் மந்திரத்தினை மென்மையாக உள்ளத்தில் அசையும்படியாக ஒலிக்கத் துவங்கினாள் (Sarveswaran, Dias and M. Butt. 2018)[6]. தொடர்ந்து பொது வழிபாட்டு முறைகளான நிகழ்வுகளில் முக்கிய

தன்மையுடையதும் மேற்சொன்னதுமான ஆட்டுக் கிடாயின் குருதியில் பிசையப்பட்டதான வெள்ளரிசியினை நரபலியாக அமைத்து, பலதானிய வித்துகளாகிய நிவேதனப் பொருள்களை பிறம்புக் கூடையில் வைத்தும், பல்வகையான மணம் வீசும் பொருள்களை உடையதான மாலைகளைத் தொங்கலிட்டு, அந்த நிலத்திற்குரிய சிறப்பு அடையாளமாக மலரும் குறிஞ்சிப் பூக்களைத் தூவி முருகனின் வாகனமாகிய பிணிமுகம் என்ற யானையினை வாழ்த்தி, தங்கள் மலையினை ஒட்டி வாழும் ஊர்களில் உள்ளவர்களின் பசியினையும், நோய் கொடுமைகளையும், பகைகளையும் நீக்கி நல்வாழ்வு அருளும்படியாக வணங்குகின்றார். இதனை,

சிறுதினை மலரொடு ......................................................

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட

என்று அடிகளில் காட்சிப்படுத்தி உரைக்கின்றார் (Jagannathan, 2017)[2].

## வழிபாடு உணர்த்தும் முருகவரலாறு

‘முருகன்’ என்ற கடவுளின் தோற்றம் பற்றிய கதை விசித்திரமானது. “ஆதலால் அவனே மழலையாயினான் காண்” என்று கந்தபுராணம் முருகனின் அவதார நோக்கத்தினை எடுத்துரைக்கின்றதனைக் காண முடிகின்றது (Deveci & Ayish, 2021)[7].

என்ன நிகழ்ந்தது என்று ஆய்ந்து பார்த்தால், அசுரர்களை வதம் செய்ய சிவனின் அருளால் ஒரு குழந்தை தோன்றுகின்றது. திருமுரக கிருபானந்தவாரிய சுவாமிகள் கூறுவார்கள். ‘முருகன் ஒருவன் தான் சுத்தமான ஆண்’ என்று. ஏன்? என்றால், அவன்தான் பெண்மை கலக்காத ஆணிலிருந்து பிறந்தவன் என்று கூறுவார்.

சங்ககால உருவ வழிபாடு என்பது போரில் மாண்ட வீரர்களுக்கு ஒரு கல் எடுக்கும் வழக்கம் உருவாகி, அதுகாலப் போக்கில் உருவ வழிபாடாகவும், சிற்பக்கலையின் வித்தாகவும் அமைந்தன. அவற்றுள் சூரனை வதைக்க வந்த அருளாளன் என்று கந்தனாகிய முருகன் போற்றப்பட்டான். பன்னிரண்டு கரங்களையும், ஆறு முகத்தினையும் வைத்து எழுந்த வழிபாட்டில் முருகனின் வரலாறு மற்றும் அருட்தன்மை பேசப்படுகின்றது.

மாகிருள் நாலம் மறுகின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம், ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வடிவ
அந்தணர் வேள்வி ஓர்க் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம் பட்மன்றே ஒருமுகம்
குறவர் மடமகள்
கொடிபோல் நுசுப்பின்

மடவரல் வள்ளியொடு
நகையமர்ந்தன்றே

என்ற ஆறுமுகங்களின் அழகினை மட்டுமின்றி அவனது செயல்பாடுகளையும் எடுத்துரைக்கின்றது (Jagannathan, 2017)[2].

இதனை எளிமையாக அருணகிரியார்,

ஏறுமயிலேறு விளையாடும் முகம் ஒன்று
ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்று
கூறும் அடியார்கள் வினைதீர்த்த முகம் ஒன்று
குன்றுருவவேல் வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று
ஆறுமுகமானவன் நீயருள வேண்டும்
ஆதி அருணாசல அமர்ந்த பெருமாளே

என்று பாடுகின்றார் (Jagannathan, 2017)[2].

இக்கட்டுரையின் முற்பகுதியில் வழிபாட்டின் சிறப்பினைக் கூறும்போது முருக வழிபாடே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது என்று ஒரு கருத்தினைக் கூறினேன். காரணம் இதுதான். சிவனே ஐந்து முகங்களையுடையக் கடவுளாகப் பார்க்கப்படுகின்றார். ஆனால் முருகன் ஆறுமகக் கடவுளாகக் காட்சிப்படுத்தப்படுகின்றார் (Antonova, 2020)[8]. அதனுள் ஒவ்வொரு முகமும் ஒவ்வொரு அருள் தன்மை உடையவனாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

**நிறைவுரை**

உலகம் முழுவதும் உள்ள அடியார்கள் விரும்பிப் போற்றும் கடவுளாக முருகன் காட்சிப்படுத்தப்படுகின்றான். இன்று பழந்தமிழ் மக்களின் உயர்வடிவமாக எளிய வழிபாட்டுக் கடவுளாக போற்றி வணங்கப்பட்டதன் சுவடுகள் இன்று உலகம் முழுவதும் ஏற்றுப் போற்றப்படுகின்றதன் மூலம் முருக வழிபாட்டின் சிறப்பினை நாம் உணர இயலும். இதற்கு திருமுருகாற்றுப்படை நூல் நமக்கு வழிகாட்டியாகவும் அமைகின்றது. அவனருளால் அவன்தான் வணங்கி இறையருள் பெறலாம்.

**தொகுப்புரை**

சங்கத்தமிழ் நூல்களில் ஒன்றாகி பாட்டு நூலாக மட்டுமின்றி, நம் வாழ்வின் ஏற்றம் தரும் வழிமுறை கூறும்படி நூலாகவும் படிக்க வேண்டிய நற்றமிழ் இலக்கியமாகவும் அமைந்திட்ட திருமுருகாற்றுப்படையின் சிறப்பும், அந்நூல் உணர்த்தும் முருக வழிபாடு குறித்த சிந்தனைகளையும் எடுத்துரைப்பதாக இவ்ஆய்வு அமைந்துள்ளது.

வழிபாடு என்பது ஏதோ பொழுதுபோக்கான ஒன்றோ அல்லது மத, சமய சடங்கு முறையினைச் செய்யும் செயலுல் ஒன்றாக மட்டுமின்றி, அது வாழ்வியலையும் மனதையும் செம்மைப்படுத்த உதவும் செயல்முறையாகும் என்பதனையம் இதன் வழி உணர இயலுகின்றது.

**மேற்கோள் நூல்கள்:**


1. Tirumantiram. (1991), *A Tamil scriptural Classic. By Tirumular*. Tamil Text with English Translation and Notes, B. Natarajan. Madras, Sri Ramakrishna Math.
2. Jagannathan, Ki.Va., (2017), Thirumurugatrupadai, Chennai: Create Space Independent Publishing Platform.
3. Agilan, D. K., & Varatharajan, V. (2021). Centūl Kāḷiyam'maṉ vaḻipāṭu [Worship of Sentul Kaaliamman]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *5*(2), 165-175. https://doi.org/10.33306/mjssh/130.
4. N.Hemamalini. (2020). The Tamil life philosophy [*தமிழர் தம் மெய்யியலும் வாழ்வியலும்*]. *Muallim Journal of Social Sciences and Humanities*, *4*(1), 29-35. https://doi.org/10.33306/mjssh/52.
5. Adikallasiriyar. (1978), *Tholkapiyam Collatikāram Iḷampūraṇar Urai [Ilampuranars commentatory on Tholkapiyam Solathokaram]* Thanjavur: Tamil University.
6. Sarveswaran, Dias and M. Butt. (2018). "Thamizh FST: A Morphological Analyzer and Generator for Tamil Verbs," 3rd International Conference on Information Technology Research (ICITR), 2018, pp. 1-6, doi: 10.1109/ICITR.2018.8736139.
7. Deveci, T., & Ayish, N. (2021). Qualitative Adjectives in EFL Students' Reflective Writing Essays. *Journal of Language and Education*, *7*(1), 64-77. https://doi.org/10.17323/jle.2020.10979.
8. Antonova, M. (2020). The Container Image Schema as the Conceptual Basis of English Adjectives' Semantics. *Journal of Language and Education*, *6*(1), 8-17. https://doi.org/10.17323/jle.2020.9751.